**சுருக்கம்**

நில மாற்றம் – பொள்ளாச்சி நகராட்சி– பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண். 4, பிளாக் எண்.30டி, புதிய நகரளவு எண். 36, பழைய நகரளவு எண். 35/2எ, 36/1எ விரிவு அபிவிருத்தி திட்ட எண்.4 இல் உள்ள 2998 ச.மீ (74 செண்ட்) நிலம்– மத்திய அரசின் வருமான வரித் துறை அலுவலகம் கட்ட நிலக்கிரயம் பெற்று நிலமாற்றம் செய்ய அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண்.33 நாள் :12.02.2010

படிக்க :

1. உதவி ஆணையர், வருமான வரித்துறை, கோயம்புத்தூர் கடித எண்.1618 (7A) / 2009-10, நாள். 31.7.2009 மற்றும் 7.1.2010.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.50769/ 09/ டிபி3, நாள் 24.11.2009 மற்றும் 29.1.2010.

---

ஆணை:

கோயம்புத்தூர் வருமான வரித்துறை, உதவி ஆணையர் அவர்கள், முதலாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சிப் பள்ளி கட்டுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 4–இல், சர்வே எண்.36, பிளாக் எண்.30டி, அழகப்பா லேஅவுட்டில் உள்ள 2998 ச.மீ (74 செண்ட்) நிலத்தினை மத்திய அரசின் வருமான வரித்துறை அலுவலகம் கட்ட பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை சட்ட விதிமுறைகளுக்குட்பட்ட நில மதிப்பினை செலுத்தி நிலமாற்றம் செய்ய அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண். 4, பிளாக் எண்.30, புதிய நகரளவு எண். 36 இல் பழைய நகரளவு எண். 35/2எ, 36/1 எ விரிவு அபிவிருத்தி திட்ட எண்.4 இல் உள்ள 2998 ச.மீ (74 செண்ட்) பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தின் அருகாமையில் நகராட்சியின் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, நேதாஜி ரோடு ஆரம்பப்பள்ளி மற்றும் தனியார் பள்ளிகள் அதிக அளவில் செயல்பட்டு வருகின்றன என்பதால், தற்போது அவ்விடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட தேவை எழவில்லை என நகராட்சி ஆணையர் பொள்ளாச்சி அவர்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும், நிலத்திற்கான தற்கால சந்தை மதிப்பினை செலுத்த வருமான வரித்துறை ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை வகைமாற்றம் செய்யும் இசைவினை முன்னிறுத்தி, மேற்படி நிலத்திற்கான தற்கால சந்தை மதிப்பினைப் பெற்றுக் கொண்டு, மத்திய அரசின் வருமான வரித் துறை அலுவலகம் கட்ட வருமான வரித்துறைக்கு நிலமாற்றம் செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

4. பொள்ளாச்சி நகர் மன்றமும் தனது தீர்மான எண். 606, நாள் 30.10.2009–ல் மேற்படி பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தின் அருகாமையில் நகராட்சியின் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, நேதாஜி ரோடு ஆரம்பப்பள்ளி மற்றும் தனியார் பள்ளிகள் அதிக அளவில் செயல்பட்டு வருகின்றன என்பதால், தற்போது அவ்விடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட தேவை எழவில்லை எனக் கருதி மேற்படி இடத்திற்கான அரசு நிர்ணயிக்கும் தொகையினை பெற்றுக்கொண்டு, வருமான வரித் துறைக்கு நிலமாற்றம் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண். 4, பிளாக் எண்.30, புதிய நகரளவு எண். 36 இல் பழைய நகரளவு எண். 35/2எ, 36/1 எ விரிவு அபிவிருத்தி திட்ட எண். 4 இல் உள்ள 2998 ச.மீ (74 செண்ட்) நிலத்தினை மத்திய அரசின் வருமான வரித் துறை அலுவலகம் கட்ட, நில வகைப்பாடு மாற்ற இசைவினை நகர் ஊரமைப்பு ஆணையரிடமிருந்து பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும், அரசாணை (நிலை) எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.2.2000–ன்படி நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு தேவையானாலும், சந்தை மதிப்பை பெற்றுக்கொண்டு (Market value at that time of Transfer) நிலமாற்றம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படிடையிலும், நிலமாற்றம் மேற்கொள்ளப்படும் சமயத்தில், நிலவும் சந்தை மதிப்பினை வருமான வரித்துறையிடமிருந்து பெற்றுக் கொண்டு, நிலமாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

**பெறுநர்**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்.
நகராட்சி ஆணையர், பொள்ளாச்சி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்,
(நகர்மன்றத் தலைவர் வழியாக)
தலைமை ஆணையர், இந்திய அரசு வருமான வரித்துறை, 63, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர்–641 018.

**நகல்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் செயலர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர்,
சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**